



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் கோட்டை மைதானத்தில் மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, தலைமைக் கழக வழக்கறிஞர். சூர்யா வெற்றிகொண்டான் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே..சுபாசு, மு கார்த்திகேயன், சி.ராஜேந்திரன், தாமரைக் கண்ணன், பா.ரகுபதி, கே.ஆர்.முருகன், பி.அசோகன், மஞ்சுளா, எம்.எம்.ஷெரீப், வி.கணேசன், சா. சுப்பிரமணி, ஜெகன்நாதன் இப்ராகீம் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினார்கள்.

### எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில்

# கழகக் கூட்டணியின் வெற்றிக்காக கடுமையாக உழைப்போம்!

## நத்தம் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!



நத்தம், ஆக.11 - நத்தத்தில் நடைபெற்ற கழக வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் அர. சக்கரபாணி கலந்துகொண்டு, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் கழக கூட்டணியின் வெற்றிக்காக அயராது உழைக்க வேண்டும் என்று கூறினார்.

நத்தம் சட்டமன்றத் தொகுதி அளவிலான வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நத்தத்தில் நடந்தது. திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர், உணவு மற்றும் உணவு பொருள் அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது

கலைஞர்நூற்றாண்டு விழாவையொட்டி தமிழகத்தின் 234 சட்டமன்ற தொகுதிகளிலும் தமிழக முதல்வர் அறிவுறுத்தலின் பேரில் கலைஞர் திரு உருவச்சிலை அமைக்கப்பட வேண்டும். அனைத்து கிராமங்களிலும் கழக கொடி ஏற்றிட வேண்டும். கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. கூட்டணி அமைத்து 39 தொகுதிகளில் மிகப்பெரும் வெற்றியை பெற்றோம். அதில் திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் நத்தம் சட்டமன்ற தொகுதியில் மட்டும் ஒரு லட்சத்து நாலாயிரம் வாக்குகள் கூடுதலாக பெற்றோம் .வரும் தேர்தலில் அதைவிட அதிகமாக வாக்குகள் நீங்கள் பெற்றுத் தர வேண்டும் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனைகளான மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து முதியோர் உதவித்தொகை 1200 ஆக உயர்வு, மாற்றுத் திறனாளிகளுக்கு 1500 ஆக உயர்வு, மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம் என்று நமது ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறினாலே நமக்கு மக்களிடையே அதிக ஆதரவு கிடைக்கும். மேலும் வாக்காளர்கள் பட்டியலில் இறந்தவர்கள் பெயர்கள் நீக்கப்பட்டு 18 வயது பூர்த்தியான புதிய வாக்காளர்கள் பெயர்களை விடுபடாமல் சேர்க்க வேண்டும். மணிப்பூர் விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நம்பிக்கை இல்லா தீர்மான குறித்த நாடாளுமன்ற விவாதத்தில் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றிய உரை முதல்வர் உட்பட பலரின் பாராட்டையும் பெற்றுள்ளது என்றார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம், மாவட்டப் பொருளாளர் விஜயன், மாவட்ட துணை செயலாளர் ராஜாமணி, பேரூராட்சி தலைவர் சிக்கந்தர் பாட்சா, பேருச் செயலாளர் ராஜமோகன், ஒன்றிய செயலாளர் ரத்தினகுமார், தர்மராஜன், மோகன், வெள்ளிமலை ,மாவட்ட பிரதிநிதி அழகர்சாமி, மாநில பொதுக்குழு உறுப்பினர் குமாரசாமி, அவைத் தலைவர் சரவணன் உட்பட நத்தம் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த நத்தம், சாணார்பட்டி ஒன்றிய நகரம் உள்ளிட்ட 327 வாக்குச்சாவடி முகவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இப்ரில் ஆசித் நன்றி கூறினார்.

**ஒட்டன்சத்திரம்**

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் நாடாளுமன்ற தேர்தல் பணிகள் மற்றும் புதிய வாக்காளர்கள் சேர்த்தல் வருகின்ற 17ஆம் தேதி ராமநாதபுரத்தில் முதல்வர் தலைமையில் நடைபெற உள்ள வாக்குச்சாவடி முகவர் கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றியும்ஆலோசிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ராஜா மணி, நகர செயலாளர் வெள்ளைச்சாமி ஒன்றிய செயலாளர் ஜோதீஸ்வரன் ,தர்மராஜ் தங்கராஜ், சுப்பிரமணி ,மாவட்ட ஊராட்சி குழு துணைதலைவர் பொன் ராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் கண்ணன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார், சிவ பாக்கியம், ராமசாமி , ராமகிருஷ்ணன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாண்டியராஜன் ஆனந்த ராஜ் ,ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் அசோக் வேலுச்சாமி, தண்டபாணி, முருகானந்தம் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.

**வேடசந்தூர்**

வேடசந்தூரில்நடைபெற்ற முகவர்கள் கூட்டத்தில் மேற்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் ராஜா மணி மற்றும் வேடசந்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கவிதா பார்த்திபன் வடமதுரை ஒன்றிய செயலாளர் சுப்பையா , பாளையம் ஒன்றிய செயலாளர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்று பேசினார். கூட்டத்தில் பாளையம் நகர செயலாளர் கதிரவன் ,வடமதுரை நகரச் செயலாளர் கணேசன், அய்யலூர் நகர செயலாளர் கருப்பன், எரியோடு பேரூராட்சி தலைவர் முத்து லட்சுமி கார்த்திகேயன், எரியோடு நகர செயலாளர் செந்தில்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் வாக்குச்சாவடி முகவர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் திண்டுக்கல் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ரவி சங்கர் நன்றி கூறினார்.

### முதுகுளத்தூர் தொகுதியில் - தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட

# 1500 பேருக்கு 12 வகையான மளிகைப் பொருட்கள்!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வழங்கப்பட்டது!

முதுகுளத்தூர், ஆக. 12- முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு மற்றும் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் கதிர் துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜ கண்ணப்பன், ஏற்பாட்டில் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முதுகுளத்தூர், சாயல்குடி, கமுதி, கடலாடி, மற்றும் பேரையூர், கீழத்துவல், ஆகிய நகரங்களில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் செவிலியர்கள், மற்றும் கடைநிலை ஊழியர்கள்,சுமார் 1500 பயனாளர்களுக்கு 5. கிலோ அரிசி மற்றும் 12. வகையான மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கமுதி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கமுதி வடக்கு ஒன்றிய செயலாளர் வி.வாசுதேவன் தெற்கு ஒன்றிய செயலாளர் மனோகரன், மத்திய ஒன்றிய செயலாளர் சண்முகநாதன், பேரூர் கழகச் செயலாளர் பாலமுருகன், சாயல்குடி மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜெயபாலன், கடலாடி ஒன்றிய செயலாளர் ஆப்பனூர் ஆறுமுகவேல்,

கிழக்கு ஒன்றிய செயலாளர் குலாம் முகைதீன், பேரூர் கழக செயலாளர் வெங்கடேஷ், முது குளத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பூபதி மணி, மேற்கு ஒன்றிய செயலாளர் சண்முகம், மத்திய ஒன்றியச் செயலாளர் கோவிந்தராஜ், மற்றும் பேரூர் கழகச் செயலாளர் ஷாஜகான், கமுதி ஒன்றியக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், துணைத்தலைவர் அய்யனார்,மற்றும் சத்தியேந்திரன், டோனி, ரஞ்சித் மணிகண்டன், மற்றும் மாவட்ட மாநில ஒன்றிய நகர கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

### ‘வாட்ஸ்அப்’ பில் வந்த செய்தி!

## தேர்தல் பிரச்சார சபையாக மாறிப் போன பாராளுமன்றம்..!

நாடே எதிர் பார்த்த ஒன்றிய தலைமை அமைச்சர் உரையில்..

பற்றி எரியும் மணிப்பூர் ஹரியானா கலவரங்களுக்கு தீர்வு என்ன??

இதற்கான எந்த பதிலும் இல்லை.!!!

மாறாக.. இந்திய ஒன்றியத்தின் பிரச்சினைகளுக்கு காரணம்..

70 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்த நேரு.. 60 ஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்த இந்திரா..

காரணம் என்று ஒப்பாரி வைத்த பிரதமர்.!!

வேடிக்கையான பதிலுரை..

மணிப்பூரில் 4000 வீடுகள் அழிப்பு..

60000 பேர் அகதிகளாக.. 150 பேர் கொலை.. 300 வழிப்பாட்டுத் தலங்கள் அழிப்பு..

இக் கொடுமைகளுக்கு பதில் கூறாமல்..

காங்கிரஸ் திமுகவை வசை பாடிய பிரதமர்..!!

மணிப்பூர் கலவரத்திற்கு தி.மு.க. காங்கிரஸா காரணம்.???

இப்படி ஓர் பிரதமரை விடுதலை இந்தியா இப்போது தான் காண்கிறது..

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில்..

ஒரு பிரதமர் பாராளுமன்றத்திற்கு வந்து உரையாற்றுவதற்கே.. எதிர்க் கட்சிகள் போராடும் நிலையில் புதிய இந்தியா.!!!

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.வினர்

# வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினருக்கு வேண்டுகோள்!



மதுரை, ஆக 12 - மதுரை வடக்கு மாவட்ட திமுகவினர் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார், அதன் விவரம்.

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2024 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்து டன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் செய்யப்படும் என்று அறிவித்துள்ளது. 2024ன் முன் திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக வாக்காளர்களை சரிபார்க்க அந்தந்த பகுதியில் உள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீட்டுக்கு வீடு சரிபார்க்கும் பணி வருகிற 21.07.2023 முதல் தொடங்கப்பட்டு 21.08.202023 வரை இந்த பணி நடைபெறுகிறது. வீட்டிற்கு வீடு சரிபார்ப்பு காலத்தின் போது கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வாக்குச்சாவடி அலுவலர்கள் ஒவ்வொரு வீட்டிலும் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களின் விபரங்களையும் சரி பார்ப்பர். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்பும் தகுதியுள்ள குடிமக்கள் அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் திருத்தங்கள், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைத்தல், இட மாற்றம் செய்ய விரும்பும் வாக்காளர்கள் வீடு தேடி வரும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மூலம் செய்து கொள்ளலாம். 01.10.2023 அன்று 18 வயது அடைய உள்ளவர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

ஆகவே வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மதுரை கிழக்கு, சோழவந்தான், மேலூர் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,

பாக நிலை முகவர்கள் (BLA 2) மற்றும் கழக உடன் பிறப்புகள் துரிதமாக செயல்பட்டு வாக்காளர் சேர்த்தல் மற்றும் சரிபார்த்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

# இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் சிறப்புரை!

கன்னியாகுமரி, ஆக. 12 - கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) ஆய்வு கூட்டம் 10.08.2023, வியாழன் அன்று மாலை 5.00 மணிக்கு ஈத்தாமொழி, ராமநாயகி திருமண மண்டபத்தில் வைத்து இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆ. லிவிங்ஸ்டன் தலைமையிலும், பேரூர் கழக செயலாளர்கள் எஸ். பிரதாப்சிங் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் அவர்கள் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் கூட்டத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்ற வருகை பதிவேடு ஆய்வு செய்யப்பட்டது. வருகை தராத வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஒன்றிய மற்றும் பேரூர் செயலாளர்கள் மூலம் தகவல் தெரிவித்து ஆகஸ்ட் மாதம் 17ம் தேதி இராமநாதபுரத்தில் கழக தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் தென் மண்டலத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொள்ள செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

ஆகஸ்ட் மாதம் 17ம் தேதி வியாழக்கிழமை அன்று இராமநாதபுரம், தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில் நடைபெறும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கழக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் வாக்குச்சாவடி முகவர்களின் தேர்தல் பணி குறித்து ஆலோசனைகள் வழங்க உள்ளார்கள். எனவே குமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய அனைத்து வாக்குச்சாவடி முகவர்களும் தவறாமல் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

01.01.2024 நாளை தகுதி ஏற்பு நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில் 01.01.2024ல் 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதியதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது தி.மு.க. சார்பாக தொகுதி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2) தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் (BLO) இணைந்து மேற்கண்ட வாக்காளர் பட்டியல் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் வாக்காளர் சேர்ப்பு பணி மற்றும் சிறப்பு முகாம்களில் குமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பேரூர், வார்டு, கிளை செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியல் சீரமைப்பு பணிகளில் தங்களை ஈடுபடுத்தி கொள்ளுமாறு இக்கூட்டம் கேட்டு கொள்கிறது.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) ஆய்வு கூட்டம் ஈத்தாமொழி, ராமநாயகி திருமண மண்டபத்தில் வைத்து இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆ. லிவிங்ஸ்டன் தலைமையிலும், பேரூர் கழக செயலாளர்கள் எஸ். பிரதாப்சிங் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.வினர்

# வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணியில் முனைப்புடன் செயல்படுவீர்!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வேண்டுகோள்!



மதுரை,ஆக.12- மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.வினர் வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார், அதன் விவரம்.

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2024 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் செய்யப்படும் என்று அறிவித்துள்ளது. 2024ன் முன் திருத்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக வாக்காளர்களை சரிபார்க்க அந்தந்த பகுதியில் உள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீட்டுக்கு வீடு சரிபார்க்கும் பணி வருகிற 21.07.2023 முதல் தொடங்கப்பட்டு 21.08.2023 வரை இந்த பணி நடைபெறுகிறது. வீட்டிற்கு வீடு சரிபார்ப்பு காலத்தின் போது கீழ்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வாக்குச்சாவடி அலுவலர்கள் ஒவ்வொரு வீட்டிலும் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களின் விபரங்களையும் சரி பார்ப்பர். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்பும் தகுதியுள்ள குடிமக்கள் அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் திருத்தங்கள், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைத்தல், இட மாற்றம் செய்ய விரும்பும் வாக்காளர்கள் வீடு தேடி வரும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மூலம் செய்து கொள்ளலாம். 01.10.2023 அன்று 18 வயது அடைய உள்ளவர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

ஆகவே தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருமங்கலம், திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,

பாக நிலை முகவர்கள் (BLA 2) மற்றும் கழக உடன் பிறப்புகள் துரிதமாக செயல்பட்டு வாக்காளர் சேர்த்தல் மற்றும் சரிபார்த்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

திராவிட முன்னேற்ற கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (12.08.2023 - சனிக்கிழமை) பிற்பகல் 4.00 மணியளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளதால் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நூற்றாண்டு நாயகர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் அறிமுக கூட்டம் தொடர்பாக.

**டாக்டர். அ. சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு